**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2021**

**D011 பண்டைய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. விரிச்சி கேட்டல் என்றால் என்ன?
2. தலைவியின் கூந்தல் எப்படிப்பட்டது என தலைவன் கூறுகிறான்?
3. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?
4. ஆற்றுப்படை என்றால் என்ன?
5. குறுந்தொகையைத் தொகுப்பித்தவர் யார்?
6. நெய்தல் திணையின் உரிப்பொருள் யாது?
7. நற்றிணையின் அடிவரையறை யாது?
8. ஐங்குறுநூற்றில் மருதத்திணையைப் பாடியவர் யார்?
9. கைகோள் எத்தனை வகைப்படும்?அவை யாவை?
10. இரட்டைப்படை எண்களிலுள்ள அகநானுற்றுப் பாடல்கள் எத்திணைக்குரியவை?
11. சிறுபாணர் யார்?
12. 'பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇ'–இவ்வடிகள் வரும் நூல் எது?
13. உன்னத்துப் பகைவன் யார்? ஏன்?
14. 'புலா அம் பாசறை'–பொருள் விளக்கம் தருக.

15. நாடு கெடுவதற்குரிய காரணமாக பிசிராந்தையார் கூறியது என்ன?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. 'நின்ற சொல்லர்' என்னும் நற்றிணைப் பாடலின் கருத்தைப் புலப்படுத்துக.
2. பெண்கொலை புரிந்த நன்னன்–இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
3. உலகம் நிலைபெற்றிருப்பதற்குப் புறநானூறு கூறும் காரணத்தை விவரி.
4. அதியமானின் கொடைச்சிறப்புகள் யாவை?
5. விருந்தோம்பல் குறித்து சிறுபாணாற்றுப்படை கூறுவனவற்றை எழுதுக.
6. ஐங்குறுநூற்றுப் பாடலில் இறைச்சிப் பொருளை விளக்குக.
7. வெளிநாட்டு வாணிகம் குறித்து அகநானூறு கூறுவனவற்றை எழுதுக.
8. தமிழரின் போர்நெறி குறித்து நெட்டிம்மையார் கூறுவனவற்றை இயம்புக.

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சங்க அகப்பாடல்கள் வழி அக்கால அகவாழ்வின் மேன்மையை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) நற்றிணையில் தலைவன் கூற்றாக வருவனவற்றைத் தொகுத்துரைக்க.

2. (அ) ஐங்குறுநூற்று பாடல்கள் வழி வெளிப்படும் குறிஞ்சித்திணை வாழ்வை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) வாழ்க்கையின் பேருண்மைகளாக புறநானூறு கூறுவனவற்றை விவரித்துரைக்க.

3. (அ). பாணரின் வறுமையும் செல்வமும் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பதிற்றுப்பத்து காட்டும் சேரன் செங்குட்டுவன் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

***